மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 76, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

76—

நேரடி நெல் கொள்முதல் நிலையம்

***8392—திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதியிலுள்ள கணியூர், சோழமாதேவி மற்றும் குமரலிங்கம் ஆகிய பகுதிகளில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) 2015–2016 ஆம் பருவத்தில் திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் தொகுதியில் மடத்துக்குளம், கணியூர் மற்றும் கல்லாபுரம் ஆகிய கிராமங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 2,088 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் விவசாயிகளிடமிருந்து நெல் முழுவதும் கொள்முதல் செய்யப்பட்ட பிறகு தற்போது கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டிருக்கின்றன. நெல் வரத்து இருக்கும்பட்சத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவைகேற்ப திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத்*

2017 மார்ச் 23]

தொகுதியில் மடத்துக்குளம் ஒன்றியத்தில் சங்கராமநல்லூர், குமரலிங்கம், மடத்துக்குளம் மற்றும் கணியூர் என்ற நான்கு பேரூராட்சிகள் உள்ளன. மேலும், கிராம ஊராட்சிகளான கொழுமம், பாப்பான்குளம், சோழமாதேவி, வேடப்பட்டி, துங்காவி காரத்தொழுவு, கடத்தூர் மற்றும் ஜோத்தம்பட்டி உள்ளிட்ட கிராமங்களில் அமராவதி பாசனக் காலங்களில் நெல் பயிரிடுவது வழக்கம். உடுமலை ஊராட்சி ஒன்றியம், கல்லாபுரம் கிராமத்தையும் உள்ளடக்கியதாகும். இந்தப் பகுதிகளில் இருக்கின்ற விவசாயிகள் முதலாவதாக நெல்லும் அதையடுத்து கரும்பு மற்றும் தென்னையும் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆகவே, சோழமாதேவி கிராமத்தில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும், குமரலிங்கம் பேரூராட்சிப் பகுதியில் ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையமும் அமைத்துத் தரப்படுமா என்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளில் மட்டும் விவசாயிகளுக்கு நெல்லுக்காக 474 கோடி ரூபாயை ஊக்கத் தொகையாக வழங்கிய தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எந்தப் பகுதிகளிலெல்லாம் நெல் வரத்து இருக்கிறதோ அந்த இடங்களிலெல்லாம் நெல்லைக் கொள்முதல் செய்வதற்காக நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்துகொள்ளலாம் என அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருகின்ற அந்த இடங்களில் எல்லாம் நெல் வரத்து இருக்கும்பட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

[2017 மார்ச் 23

முற்பகல் 10—45

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிடுகின்ற சோழமாதேவி ஊராட்சி மற்றும் குமரலிங்கம் பேரூராட்சி முழுமையாக பிரதானக் கால்வாய் மற்றும் ஆற்றுப் பாசனப் படுகை சார்ந்த பகுதிகளாகும். ஆகவே, அந்த இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்துத்தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு நெல் கொள்முதல் செய்கின்ற கால அளவை குறிப்பாக 3 மாதங்கள் அறுவடைக் காலம் என்று சொன்னால் ஓரிரு மாதங்களிலேயே நெல் கொள்முதல் நிலையங்களை மூடிவிடுகின்றார்கள். ஆகவே, அனைத்து விவசாயிகளும் பயனடையாத ஒரு சூழ்நிலைதான் ஏற்படுகிறது. மேலும், எந்த இடத்தில் கொள்முதல் செய்கிறார்கள் என்பது குறித்த விளம்பரத்தினை, பதாகைகளை விவசாயத் துறை மூலமாகவோ அல்லது நெல் கொள்முதல் செய்கின்ற அந்தத் துறை மூலமாகவோ வெளியிட்டால் மக்கள் அனைவரும் அதில் பயனடைவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஒவ்வொரு நாளும் இத்தனை மூட்டைகள்தான் நெல் கொள்முதல் செய்யப்படும் என்ற அளவுகோல் நிர்ணயிக்கப்படுகின்றது. ஆகவே, விவசாயிகள் முழுமையாக தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் வழங்க முடியாத சூழ்நிலை நிலவுகின்றது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விவசாயிகள் விளைவிக்கின்ற நெல்லை முழுமையாகக் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தேவை எனக் கேட்டார்கள். தேவைக்கேற்ப திறக்கப்படும் என நான் உங்கள் மூலமாக அவருக்குத் தெரிவித்திருந்தேன். அவர் மேலும் கூறுகின்றபோது, அதற்குக் கால நிர்ணயம் வைக்கப்படுகின்றது என்று சொன்னார்கள். நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதற்கு கால நிர்ணயம் கிடையாது. எப்பொழுது நெல்*

2017 மார்ச் 23]

வரத்து இருக்கின்றதோ அப்பொழுதெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திருக்கும். மக்கள் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் கோரிக்கைகள் வைப்பதன் அடிப்படையில் அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் எத்தனை நாட்களுக்குத் தேவைப்படுகின்றனவோ அத்தனை நாட்களுக்குத் திறந்து வைக்கப்பட்டிருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எல்லா காலங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைக்க வேண்டும் என்கிறார்கள். ஒரு நேரடி நெல் கொள்முதல் நிலையம் செயல்படுவதற்கு ஒரு மாதத்திற்கு 25,000 ரூபாய் செலவாகும் என்ற அடிப்படையில், நெல் வரத்தே இல்லாதபோது நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறந்து வைத்திருக்க முடியாது. எனவேதான், தேவைக்கேற்ப, நெல் வரத்து இருக்கின்றபோது, நிச்சயமாக, உறுதியாக நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படும் என்பதை மீண்டும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 77, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

77—

கைத்தறி விற்பனை நிலையம்

***12774—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதி, போளூரில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என